பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 08 சனிக்கிழமை (24-08-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 263



# ஆனையிறவு முற்றுகை தற்காலிகமான தளர்வே!

## மாத்தயா சிறப்புப் பேட்டி

— உதயன் அரசியற் செய்தியாளர் —

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 24

"ஆனையிறவுச் சண்டை விடுதலைப் புலிகளின் இராணுவ பலத்தின் புதுமுக வளர்ச்சியைக் காட்டுகின்றது. இராணுவ தந்திரோபாய நோக்கத்துக்காக முற்றுகை தற்காலிகமாகத் தவிர்க்கப்பட்டுள்ளதே தவிர, சண்டை முற்றுப் பெறவில்லை. எதிரி தனது கல்லறை மீது வெற்றிக்கொடியை உயர்த்தியிருக்கிறான். - அவ்வளவுதான்."

- தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதித் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா (மாத்தயா) இவ்வாறு தெரிவித்தார். உதயன் அரசியற் செய்தியாளருக்கு அளித்த விசேட பேட்டி ஒன்றிலேயேஅவர் இப்படிக் குறிப்பிட்டார்.

பேட்டியின் விவரம் வருமாறு:-

கேள்வி: 1987 ஆம் ஆண்டு ஏற்பட்ட இந்திய - புலிகள் போர், ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு பின்னடைவை [Set back] ஏற்படுத்தியதாகக் கூறலாம். அதுபோன்ற சூழ்நிலை இப்போதும் ஏற்பட்டிருக்கின்றது என்று கருதுகின்றீர்களா? இந்தியாவில்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## அரசு - புலிகள் பேச்சுக்கு வாய்ப்பு ஏதும் இல்லை!

### சுயாதீன செய்தி வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, ஆக. 24

ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தற்போதைய சூழ்நிலையில் சமரசப் பேச்சுகள் இடம் பெறுவதற்கு சாத்தியம் ஏதும் இல்லை.

சுயாதீன செய்தி வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

பேச்சுக்கான இரண்டு நிபந்தனைகளில் ஸ்ரீலங்கா அரசு தொடர்ந்தும் 'விடாப்பிடியாக' இருப்பதாகவும் — நிபந்தனையுடன் கூடிய எந்தப் பேச்சுவார்த்தைக்கும் இணங்கப் போவதில்லை என்பதை விடுதலைப் புலிகள் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தியிருப்பதாகவும் அந்த

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பண்ணை இறங்கு துறையில் பொம்மர்கள் குண்டு வீச்சு!

### அறுவர் காயம்; கடலில் குதித்தவர் மரணம்

யாழ்ப்பாணம், ஆக. 24

மண்டைதீவுச் சந்திக்கு சமீபமாக பண்ணைப் பால இறங்குதுறைப் பகுதியில் நேற்றுப் பகல் இடம்பெற்ற குண்டு வீச்சுச் சம்பவத்தின் போது ஒருவர் மரணம் அடைந்தார். குண்டு வீச்சுக் காரணமாக நான்கு வயது பெண் குழந்தை உட்பட ஆறு பேர் காயம் அடைந்தனர்.

இரு பொம்மர்கள் நான்கு குண்டுகளை வீசின.

எழுவைதீவைச் சேர்ந்த குருசுதவம் (28 வயது) என்பவரே சம்பவத்தின் போது இறந்தவர் ஆவார்.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பிரபா படத்துடன் "ஏஷியா வீக்"

யாழ்ப்பாணம், ஆக. 24

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் படத்துடன் கூடிய முகப்பு அட்டையுடன் இவ்வார "ஏஷியா வீக்" சஞ்சிகை வெளியாகியிருக்கிறது.

நேற்றைய திகதியிடப்பட்ட இந்தச் சஞ்சிகையில் ஸ்ரீலங்கா விவகாரம், ஆனையிறவுச் சண்டை, தெற்கு நிலைமை ஆகியவை தொடர்பான சில கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. (உ)

## சன்னத்தை குத்தியவர் காயம்!

யாழ்ப்பாணம், ஆக. 24

வீதியில் கிடந்த துப்பாக்கிச் சன்னம் ஒன்றை எடுத்து, கல்லின்மேல் வைத்து மற்றொரு கல்லினால் குத்திய இளைஞர் அது வெடித்ததில் காயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்று மாலை யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் இடம்பெற்றது.

குமாரசாமி ராஜன் (வயது 16) என்பவரே காயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (உ-15)

## ஷெல் வீச்சு

சுளிபுரம், ஆக. 24

பொன்னாலை பெரியவர் கோவிலடிப் பகுதியில் வியாழன், வெள்ளிக்கிழமைகளில் ஷெல் வீச்சுக்கள் இடம் பெற்றன. ஷெல் வீச்சுக் காரணமாக இப்பகுதியில் உள்ள மயானத்துக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. (இ-28)

## தடை முகாமில் இறந்தவர் யார்?

யாழ்ப்பாணம், ஆக. 24

தாண்டிக்குளம் தடை முகாமுக்கு அருகில் இறந்து கிடந்த ஒருவரின் சடலம் வவுனியா ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 21 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் இறந்த சம்பந்தப்பட்ட நபர்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தடை!

மொஸ்கோ, ஆக. 24

சோவியத் அதிபர் கோர்ப்பச்சேவுக்கு எதிரான சதிப்புரட்சி முறியடிக்கப்பட்டபோதிலும் சோவியத்தை ஆளும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராக நாட்டின் பல பகுதிகளிலும் எரிமலை வெடித்திருக்கிறது;

லித்துவேனியாவிலும், லத்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வெளிவிவகார அமைச்சருக்கும் கல்தா!

மொஸ்கோ, ஆக. 24

புரட்சியாளர்களுக்கு சாதகமாக நடந்து கொண்டதற்காக சோவியத் வெளிவிவகார அமைச்சர் அலெக்ஸாண்டர் பெஸ்மியட்னிக் நேற்று பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் வேறு பல அங்கத்தவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. (உ-த)

## "பிராவ்தா" வெளியிடத் தடை

மொஸ்கோ, ஆக. 24

கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகையான "பிராவ்தா" உட்பட ஆறு பத்திரிகைகள் ரஷ்ய மாநிலக் குடியரசின் ஜனாதிபதி பொரிஸ் யெல்சினால் தற்காலிகமாகத் தடைசெய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, சோவியத் செய்தி ஏஜென்ஸியான "டாஸ்" நிறுவனத்தின் தலைவரும்—

சோவியத் அரசின் உத்தியோகபூர்வ நாளிதழான 'இஸ்வெஸ்தியா'வின் பிரதம ஆசிரியரும் நேற்று பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

பழைமைவாதிகளின் அதிரடிப்புரட்சியை ஆதரித்ததற்காகவே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-எ-த)

## புலிகளுக்கும், சீக்கிய தீவிரவாதிகளுக்கும் எதிராக இந்தியா - பிரிட்டன் கூட்டு ஒப்பந்தம்

சென்னை, ஆக. 24

விடுதலைப் புலிகள் மற்றும் காலிஸ்தான் போராளிகளுக்கு எதிராக கூட்டு நடவடிக்கை எடுக்கத்தக்க வகையில், இந்தியாவும் பிரிட்டனும இரு தரப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள இருக்கின்றன.

இந்தியாவுக்கான பிரிட்டிஷ் தூதர் [illegible] இத்தகவலைத் தெரிவித்தார்.

நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இருதரப்பு ஒப்பந்தம்' குறித்து இறுதி முடிவு எடுப்பதற்காக இந்திய உயரதிகாரிகள் குழு லண்டன் சென்று அங்கு பிரிட்டிஷ் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# COMPUTER
BASIC

புதிய பிரிவு ஆரம்பம்: 28 - 08 - 1991
10- 30 மணி

SCHOOL OF BUSINESS ADMINISTRATION

16, 3 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.

(சி/0296)


## காணவில்லை

### சீனி இராசா



படத்தில் காணப்படும் சீனி இராசா என்பவரை கடந்த 14 - 08 - 1991 புதன் கிழமை முதல் காணவில்லை. 58 வயதான இவர் சுமார் 5½ அடி உயரமும், சிவலையான மெலிந்த தேகமும் கொண்டவர். மனநோயாளி கடைசியாக சேட் இன்றி, பச்சைநிற சாரம் மட்டும் அணிந்திருந்தார். கண்டவர்கள் தயவு செய்து பின்வரும் முகவரியில் அவரை ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன், அல்லது அவரை வைத்துக் கொண்டு தகவல் தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

திருமதி இராசா நேசமலர்.
(மனைவி)

சபாலேன்,
தம்பாலை, அச்சுவேலி.

[17878]

## St. John's College, Jaffna and Chundikuli Girl's College, Jaffna

## ADMISSION - 1992

1. பின்வரும் வகுப்புக்களில் மட்டும் வெற்றிடங்கள் உள்ளன.

   **ஆண்டு ஒன்று, ஆண்டு ஆறு, ஆண்டு பத்து.**

2. விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 20 — 09 — 1991.
   - (அ) விண்ணப்பப்படிவங்களை அவ்வக் கல்லூரிகளிலிருந்து 02-09-1991 முதல் 14-09-1991 வரை பெற்றுக் கொள்ளலாம்.
   - (ஆ) எக்காரணம் கொண்டும் 14-09-1991க்குப் பின் விண்ணப்பப்படிவங்கள் கொடுக்கப்படமாட்டா.
   - (இ) எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
   - (ஈ) 20-09-1991க்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
3. விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இணைக்கப்பட வேண்டும். பிலழயாகவோ அன்றி பூரணமாகவோ நிரப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. விண்ணப்படிவங்களை ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் காலல ஒன்பது மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை அவ்வக் கல்லூரிகளில் படிவமொன்றிற்கு ரூபா 50/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
5. வயதெல்லைகள்:
   - (அ) ஆண்டு ஒன்று -
     விண்ணப்பதாரி 01-02-1986 க்கும் 31-01-1987 க்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   - (ஆ) ஆண்டு ஆறு -
     விண்ணப்பதாரி 01-02-1981 இல் அல்லது அதற்கு பின் பிறந்திருத்தல் வேண்டும்.
   - (இ) ஆண்டு பத்து -
     விண்ணப்பதாரி 01-02-1977 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.
6. பிரவேசப் பரீட்சை -
   ஆண்டு ஆறு, ஆண்டு பத்து ஆகிய வகுப்புக்களுக்கு 19-10-1991 காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும்-

- அதிபர்கள்.

யாழ்ப்பாணம். [சி-0289]

# வவுனியா ராணுவ முகாமில் ம. எண்ணெய் சர்ச்சை!

## வெளிநாட்டுப் பிரமுகர் பாய்ச்சல்

வவுனியா, ஆக. 24

வடபகுதிக்கு எடுத்துவர மண்எண்ணெய்க்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதா அல்லது இல்லையா என்பது பற்றி வவுனியா தடைமுகாமில் கடந்த செவ்வாய்க்கிழமை பெரும் வாக்குவாதம் இடம் பெற்றது.

வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனப் பிரதிநிதி ஒருவருக்கும் படையினருக்கும் இடையிலேயே இந்த வாக்குவாதம் நிகழ்ந்தது.

இதுபற்றித் தெரியவருவதாவது:-

தேசிய கிறிஸ்தவசபையின் ஆலோசகரான ஒல்லாந்து நாட்டைச் சேர்ந்த திரு. பபிங் யாழ் மாவட்டத்தில் நிவாரண வேலைகளுக்கென கொழும்பிலிருந்து நிவாரணப் பொருள்களுடன் 9 பரல் மண் எண்ணெய்யும் எடுத்து வந்தார்.

வவுனியா தடை முகாமில் பரிசோதனை நடத்திய இராணுவத்தினர் மண்எண்ணெய் தடைசெய்யப்பட்ட பொருள் என்றும், அதனை எடுத்துச் செல்ல முடியாது என்றும் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்தே படையினருக்கும் திரு. பபிங்குக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

ஸ்ரீலங்கா அரசு வெளியிட்ட தடைசெய்யப்பட்ட பொருள்களின் பட்டியலில் மண்எண்ணெய் இல்லை என்றும்—

கொழும்பிலும், அனுராதபுரம் இராணுவ முகாமிலும் 9 பரல் மண்எண்ணெய் எடுத்துவர அனுமதிக்கப்பட்டபோதும் வவுனியாவில் மட்டும் ஏன் தடை விதிக்கப்படுகிறது என்றும் அவர் காரசாரமாக விவாதித்தார்.

[6 ஆம் பக்கம் பார்க்க]

### யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை.

## வெளி நிலைப் பட்டப்படிப்பிற்காக பதிவு செய்தல் 1990 / 91

(வர்த்தக முதற் தேர்வு / கலை முதற் தேர்வு)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1990 / 91 கல்வியாண்டில் வெளி நிலைத் தேர்வு நாடிகளாக வர்த்தகமுதற்தேர்வு/கலை முதற் தேர்வுகளுக்குப் பதிவு செய்ய விருப்புடைய தகைமை பெற்ற ஆட்களிடமிருந்து 1991 செப்டம்பர் 30 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்பப் படிவங்களும், உரிய விவரங்களும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வெளி நிலைப் பதிவுத்தேர்வு அலகிலிருந்து நேரடியாகவோ, தபால் மூலமாகவோ 1991 ஆகஸ்ட் 21 ஆம் திகதி தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவத்தையும், பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாகப் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சிறாப்பரிடம் 50/- ரூபா செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும். தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தையும், பாடத்திட்டத்தின் பிரதியையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளருக்கு எழுதப்பட்ட காசுக்கட்டளை/ தபாற்கட்டளையுடன் சுய முகவரியிட்டு ரூபா 08/- பெறுமதியுடைய முத்திரையொட்டப்பட்ட 38 x 25 ச. மீ. அளவுடைய தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

இவ்வாண்டு கலை முதற் தேர்வு / வர்த்தக முதற் தேர்வு என்பனவற்றில் இருந்து விலக்குப் பெற விரும்புவோர் அல்லது கலை முதற் தேர்வு / வர்த்தக முதற் தேர்வு தவிர்ந்த ஏனைய தேர்வுகளுக்காக தமது பதிவுகளை மற்றைய பல்கலைக்கழகங்களில் இருந்து பல்கலைக்கழகத்திற்கு மாற்றிக் கொள்ள விரும்புவோர், ஆகியவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

பதிவாளர்.

(சி-0374)

### சீருடைத் துணிகள் ஏல விற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பின்வரும் சீர் உடைத் துணிகள் 91-8-24 இன்று காலை 10-30 மணியளவில் ஏலத்தில் விற்கப் படும்.

1. வெள்ளை பொலியஸ்டர் 'சீனரக' சேட் துணி 800 மீற்றர்
2. வெள்ளை பொலியஸ்டர் காற்சட்டைத் துணி 500 மீற்றர்

ஏலத்தில் வெற்றி பெறுபவர் பொருள்களுக்கான முழுப்பணத்தையும் பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி அப்பொருட்கள் அனைத்தையும் அன்று மாலை 4 மணிக்கு முன்னதாக அப்புறப்படுத்தல் வேண்டும். துணிகளைப் பார்வையிட விரும்புவர்கள் யாழ்.பல்கலைக்கழக நிதிப் பிரிவில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

- பதிவாளர்.

யாழ்ப்பாணம்,
பல்கலைக்கழகம்.

(சி 0377)

### யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1991 - 09 - 13 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**சமூக மருத்துவத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1 /**

**சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11.**

சம்பள அளவுத்திட்டம்:

1. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1
   ரூபா:
   9,600 - 8 x 250 - 11, 600/-
   (மாதமொன்றுக்கு)
2. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11
   ரூபா:
   8,000 - 5 x 250 - 9, 250/-
   (மாதமொன்றுக்கு)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களைத் தபாலில் பெற விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு, ரூபா 1.50 முத்திரையொட்டப்பட்ட 23 x 10 ச. மீ. அளவுடைய கடித உறையுடன் அனுப்புதல் வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளில் உள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்தில் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

- பதிவாளர்.

யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
1991 - 08 - 12

(சி-0369)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி

★

## பத்மசோதி [கப்டன் வானதி]

ஆனையிறவு மண்மீட்புப் போரில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட—எமதுகல்லூரி அதிபர் திரு. நா. க. சண்முகநாதபிள்ளை அவர்களின் சிரேஷ்ட புதல்வி—பத்மசோதி [கப்டன் வானதி] அவர்களின் 45 ஆவது நினைவு நாளில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியரல்லாத ஊழியர்கள்
யா / யாழ். மத்தியகல்லூரி.

(C/0388)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய அறிவித்தல்

மில்க்வைற் திரவ சவர்க்காரம், வேப்பெண்ணெய் நிரம்பிய போத்தலையும், அடைத்த மூடியையும் இணைத்து ஒட்டப்பட்ட தாளில் ''மில்க்வைற்'' சின்னம் உள்ளதா என்பதைக் கவனித்து வாங்குங்கள்.

விலை ½ போத்தல் ரூபா. 50/-

மில்க்வைற்

யாழ்ப்பாணம்.

[சி-0378]


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
5-4-1925

இறப்பு:
24-8-1990

திருமதி
### ஆன்றோஸ் அந்தோனிப்பிள்ளை


ஆண்டொன்று மறைந்ததம்மா
அன்பு முகத்தை மறக்கமுடியவில்லை
மாதாவின் பதி என்று
மனதிலே திடம் கொண்டீரே
நீண்ட தூரம் சென்று விட்டீரே
நிம்மதி இங்கில்லாமல்
இன்று தவிக்கின்றோம்.

இன்று 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6-00 மணிக்கு யாழ். புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கற்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்,
கணவர், சகோதரர், சகோதரி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

யாழ்ப்பாணம். (17886)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### சண்முகசுந்தரக் குருக்கள் சூரியகுமாரன்
[முன்னைநாள் ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர்]

தோற்றம்:
12 - 10 - 1952

மறைவு:
24 - 08 - 1986

அடக்கமெரிடன்பும் கொண்டாய்
அவனியோர் போற்ற வாழ்ந்தாய்
இடர்பல களைந்தனைவர்க் கென்றும்
இனியவை செய்து வந்தாய்.
படர்கொடி பாமர் தன்னை துணையென
பற்றிடு நல்வேளை தன்னில்
விடமென வந்த ஷெல் லுன்தன்
வாழ்க்கைப் படகினைச் சிதைத்ததுவே.

அம்மா, அண்ணா, அண்ணி,
மற்றும் உறவினர்கள்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (17880)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

### 1990- 1ஆம், 2ஆம், 3ஆம், 4 ஆம் கல்வியாண்டு பரீட்சைகள்

கலை / வர்த்தகம் / முகாமைத்துவம்

மேற்படி பரீட்சைகள் யாவும் கீழ்வரும் திகதிகளில் நடைபெறவுள்ளன. மாணவர்கள் கவனத்தில் கொள்ளவும்.

பரீட்சை:

1 ஆம் ஆண்டு
கலை / வர்த்தகம் / முகாமைத்துவம்
தொடங்கும் திகதி: 19 - 09 - 1991
முடிவடையும் திகதி: 28 - 09 - 1991

2ஆம் ஆண்டு
பொது / சிறப்பு
கலை / வர்த்தகம் / முகாமைத்துவம் / பகுதி 1
முதுகலை மாணித் தகுதி காண் தேர்வு
தொடங்கும் திகதி: 30 - 09 - 1991
முடிவடையும் திகதி: 11 - 10 - 1991

3ஆம் ஆண்டு
பொது / சிறப்பு
கலை / வர்த்தகம் / முகாமைத்துவம் / பகுதி II
முதுகலை மாணித் தகுதி காண் தேர்வு
தொடங்கும் திகதி: 12 - 10 - 1991
முடிவடையும் திகதி: 25 - 10 - 1991

4ஆம் ஆண்டு சிறப்பு
கலை / வர்த்தகம் / முகாமைத்துவம் / பகுதி III
முதுகலை மாணித் தகுதி காண் தேர்வு
தொடங்கும் திகதி: 26 - 10 - 1991
முடிவடையும் திகதி: 31 - 10 - 1991

#### இராமநாதன் நுண்கலைப் பிரிவு

1ஆம் ஆண்டு
தொடங்கும் திகதி: 30 - 09 - 1991
முடிவடையும் திகதி: 02 - 10 - 1991

2ஆம் ஆண்டு
தொடங்கும் திகதி: 03 - 10 - 1991
முடிவடையும் திகதி: 05 - 10 - 1991

3ஆம் ஆண்டு
தொடங்கும் திகதி: 07 - 10 - 1991
முடிவடையும் திகதி: 09 - 10 - 1991

4ஆம் ஆண்டு
தொடங்கும் திகதி: 04 - 11 - 1991
முடிவடையும் திகதி: 08 - 11 - 1991

பதிவாளர்
(சி/0376)


# கம்பியூட்டர் பயிற்சி

11 - 08 - 1991 இல் இருந்து வகுப்புகள் வழமை போல் நடைபெறுகின்றன.

புதிய பிரிவுகள்

31 - 08 - 1991 இல் BASIC, dBASE III + ஆரம்பமாகும்

விவரங்களுக்கு:

I. D. P. Computer Centre,
பிரதானவீதி, மானிப்பாய். [சி/0298]


## ஈராண்டின் இதயத்தொனி



மலர்வு: 16 — 7 — 1936

உதிர்வு: 24 — 8 — 1989

### திருமதி செல்வநாயகம் றெஜினா
[ஜெசிந்தா]

கண்ணில் மிளிர்நற் பெண்ணவளே - எங்கள்
கண்களில் நீர்வரச் சென்றனையே!
எண்ணிடு மினியநல் மனங்களிலே - என்றும்
எண்ணரும் காலமும் நின்றனையே!
கண்ணினில் நிறைந்த செந் நீருடனே - உந்தன்
கணவனும் சுவினுறு பிள்ளைகளும்
விண்ணவன் தாழ்நிதம் வேண்டுவமே - அவன்
கண்பொழி கருணையில் வாழ்குவையே!

இவரின் பிரிவால் துயருறும்;
கணவன், பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

41, ஒடக்கரை வீதி,
குருநகர்,
யாழ். நகர். (சி/0382)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மறைவு: 24-8-1989

### வேலுப்பிள்ளை இராசநாயகம்
(குழந்தைவேல்)

எங்களை அன்புடனும், பாசத்துடனும் வாழ வைத்த தெய்வமே! உங்கள் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

உரும்பராய் கிழக்கு, (சி/0300)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணப்பெண் தேவை

யாழ். இந்து, 31 வயது குற்றமுள்ள B. Sc. சிவில் என்ஜினியருக்கும், கனடா எலெக்ரிக்கல் என்ஜினியருக்கும், 32 வயது U.K அக்கவுண்டனுக்கும், B. Sc. சிவில் என்ஜினியருக்கும் மணப்பெண் தேவை. மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம்.
(17881)

யாழ். இந்து, 33 வயது ஆசிரியருக்கும், 39 வயது செஞ்சிலுவைச்சங்க உத்தியோகத்தருக்கும், 33 வயது B Sc. ஆசிரியருக்கும், 31 வயது இரண்டு B.Sc. சிவில் என்ஜினியருக்கும், குற்றமுள்ள 39 வயது சைவ போசன கமக்காரனுக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம்.
(17883)

யாழ். இந்து, 33 வயது, 32 வயது B Sc ஆசிரியர்களுக்கும், 42 வயது B Com ஆசிரியருக்கும் 34 வயது படித்த கமக்காரனுக்கும், குற்றமுள்ள 43 வயது Asst. என்ஜினியருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.
(17882)

யாழ். இந்து, 33 வயது அக்கவுண்டனுக்கும், 36 வயது மெக்கனிக்கல் என்ஜினியருக்கும், U.K யில் வேலை செய்யும் 25 வயது மணமகனுக்கும், குறைமுள்ள வெளிநாட்டு 25 வயது ஆசிரியருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம்., யாழ்ப்பாணம்.
(17884)

## தவறிவிட்டது

மாணிக்கம் பத்மநாதன் ஆகிய எனது அடையாள அட்டை 511100437V மற்றும் சவுந்தரநாயகியின் அடையாள அட்டை கொழும்பிலிருந்து வந்த பாஸ் ஆகியவை அடங்கிய பேர்ஸ் மருதனார் மடத்துக்கும், மானிப்பாய்க்கும் இடையில் 21 - 8 - 91 காலை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன பணிமனையில் அலலது பாஸில உள்ள மல்லாகம் விலாசத்தில் கையளிக்கவும். (17664)

## ரைப்ரைட்டர்

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில ரைப்பிங் வேலைகளுக்கும், பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (சி-0290)

உ

## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஆதீனம் தாபிக்கப்பட்ட 25 ஆவது ஆண்டு நிறைவு விழா (பீடாரோஹண விழா) ஆவணி மீ கார்த்திகை நட்சத்திரம் (31-08-1991) சனிக்கிழமை காலை முதல் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

[ஈ-106]

PERSONAL
# NEW SCIENCE CENTRE
**Elilakam Front Lane, Jaffna.**

★ ஆரம்பமாகும் புதிய பகுதிகள் ★

CHE. - செல்வா சேதன இரசாயனம்
PHY. - சௌந்தி மின்னியல்
ZOO. - ஈஸ்வரதாசன் சுவாசத்தொகுதி
BOT. - பாலா தாவர உடலமைப்பு
APP. - குணசிங்கம் உராய்வு.
PURE. - குணசிங்கம் ஈருறுப்பு விரிவு

நிறுவனத்தில் நேர அட்டவணையைப் பெற்றுக் கொள்ளலாம்.
(சி/0401)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## 29 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி





[மேஜர் குகதாஸ்]
**இராசரத்தினம் இராசேந்திரன்**
(இந்திரன்)

வீர ஜனனம்: 26-09-1964
வீர மரணம்: 27 07 1991

**இராசரத்தினம் இராஜகுமார்** (கிளியப்பன்)

அன்னை மடியில்: 05-04-1963
ஆண்டவன் திருவடியில்: 24-08-1988

27-07-1991 இல் ஆனையிறவு இராணுவமுகாம் தகர்ப்பு முயற்சியின் போது வீர மரணம் அடைந்த வீரவேங்கை.

எங்கள் அன்புச் செல்வங்களே!

பாசத்தின் இருப்பிடமாய் இருக்கும் மைத்துனர்களே! உங்கள் இருவரின் அன்பு முகம் ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் மறையவே மறையாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திககின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

உரும்பராய் வடக்கு, உரும்பராய். [17876]

## 6 ஆம் மாத நினைவஞ்சலி



தோற்றம்:
10-06-1919
மறைவு:
24-02-1991

குரும்பசிட்டி
**த. சின்னத்துரை**
[இளைப்பாறிய சமூக சேவை உத்தியோகத்தர்]

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்,
குடும்பத்தினர்.

14, உடையார் ஒழுங்கை, சுந்தர்மடம். (17500)

## கல்வி

பாலராசிரியர் பயிற்சி விரைவில் ஆரம்பமாகின்றது. க. பொ. த. சா/த கடைசித் தகைமையாகும். நேரில் வர முடியாதோர் கடித வழியிலும் சேரலாம்.

பாலராசிரியர் சங்கம்,
மே/பா உயர்கலைக் கல்லூரி,
73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
[17861]

அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கம் (வரையுள்ளது)
வட்டுக்கோட்டை

## பொதுக்கூட்ட அறிவித்தல்

காலம்: 0 09-1991 முற்பகல் 10-00மணிக்கு
இடம்: சங்கானை பல நோ கூட்டுறவுச் சங்க மண்டபம்

### நிகழ்ச்சி நிரல்

1 மௌன அஞ்சலி
2. சென்ற கூட்ட அறிக்கை சமர்ப்பித்தல்
3 புதிய யாப்பு சமர்ப்பித்து ஏற்றுக் கொள்ளல்
4 30 6 1991 வரையான கணக்காய்வு அறிக்கையும், 31 08 1991 வரையான கணக்கறிக்கையும் சமர்பித்தல்
5. புதிய இயக்குனர்களைத் தெரிவு செய்தல்
6. நன்றியுரை

சங்க உறுப்பினர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

— செயலாளர்.

[சி 0385]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி







| | | |
|---|---|---|
| மனுவேற்பிள்ளை சூசைப்பிள்ளை | பேதுறுப்பிள்ளை வென்சஸ்லாஸ் [பொலீஸ் உத்தியோகத்தர், முல்லைத்தீவு] | பேதுறுப்பிள்ளை அன்ரன் றெஜினோல்ட் |
| அன்னை மடியில்: 12 — 04 — 1917 | அன்னை மடியில்: 13 — 01 — 1947 | அன்னை மடியில்: 29 — 08 — 1957 |

அரக்கர் பிடியில்: 24 — 08 — 1990

பாசத்தின் ஒளியாய் ஒளிர்ந்த எம் அன்புத் தெய்வங்களே!
அரக்கரின் குண்டுக்கு பலியாகி ஆண்டொன்று மறைந்தாலும் அகலாது உங்கள் நினைவுகள்.

இவர்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

நாரந்தனை,
ஊர்காவற்றுறை.

[சி-0386]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பந்து எங்கே?

விடுதலைப் புலிகளுடன் சமரசப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான முன் முயற்சியில் அரசாங்கம் ஈடுபடுவதற்கான வாய்ப்பு எதுவுமில்லை. இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரான திரு. ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்திருக்கிறார்.

பேச்சுவார்த்தை ஏதாவது தொடங்கப்பட வேண்டுமாயின் விடுதலைப் புலிகள்தான் அதற்கான யோசனையைத் தெரிவிக்க வேண்டும். அவர்கள் தான் இது விடயத்தில் முயற்சி எடுக்க வேண்டும். — இவ்வாறு அவர் பந்தை புலிகளின் பக்கத்துக்கு வீச முயற்சிக்கிறார்.

ஆனையிறவுப் போரில் வெற்றி பெற்றதாக நினைத்துக் கொண்டு அரசாங்கம் மமதையுடன் பேசுகிறது. தான் இராணுவ மேலாதிக்க நிலையை எய்தி விட்டதாகச் சொந்த மதிப்பீடு செய்து கொண்டு வீம்பு பேசுகிறது.

ஆனையிறவு முற்றுகையை, பெரும் படைப்பலத்தைப் பயன்படுத்தி 24 நாட்களின் பின்னர் உடைத்ததை அரசு வெற்றியாகக் கருதுகிறது! மேலெழுந்த வாரியாக, வெளிப்படையாகப் பார்த்தால் அரசுக்கு வெற்றியாகத் தான் தென்படும்.

800 சிப்பாய்களை மீட்டெடுக்கப் பெரும் பணச் செலவில், குறிப்பிடத்தக்க படை இழப்புடன், நீண்ட நாட் போர் நடத்த வேண்டியிருந்தமை தோல்வி என்பது ஆழமாக நோக்கினாலே புரியும். ஆனால் அரசுக்குத் தோல்வியை ஒப்புக்கொள்ள மனம் இடம் தரவில்லை. தனக்கே வெற்றி என்ற மாயையில் நின்று புலம்புகிறது!

யாதார்த்தத்தை மறந்து தனக்கே வெற்றி என்று அரசாங்கம் கொள்வதை, கருதுவதை எவராலும் மாற்றிவிட முடியாது. தமிழர் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் விரும்பவில்லை என்ற நிலைப்பாட்டையே அது வெளிப்படையாகப் பிரதிபலிக்கிறது.

விடுதலைப் புலிகளை ஒதுக்கிவிட்டு, ஏனைய கட்சிகளுடன் சேர்ந்து இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் கண்டுவிட முடியும் என்று அரசு உள்ளூர நினைக்கிறது. அப்படிச் செய்வதன் மூலம் அவர்களை ஓரங்கட்டிவிட முடியும் என்ற மூலோபாயம் அரசுக்கு உதித்திருப்பதாகத் தெரிகிறது.

அப்படியானால், இந்தியா போட்ட தப்புக்கணக்கை ஸ்ரீலங்காவும் மீளப் பயிற்சி செய்யப்போகிறது என்பதே அர்த்தம். அதாவது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாத ஒரு தோல்வி நிலையை அரசு தானாகவே உருவாக்குகிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை இழுத்தடிப்பதற்காகவும் அரசாங்கம் தப்புக் கணக்கைப் பயிற்சி செய்து பார்ப்பதற்கு நினைக்கக் கூடும். ஆனால், சர்வதேச சூழ்நிலைகளை சரியாக எடை போடாமல், அரசு அவ்வாறு நடந்து கொள்ளுமானால், இங்கு இரண்டு நாடுகள் மிகக் குறுகிய காலத்திலேயே உருவாகி விடும்.

தமிழர்கள் தங்கள் சுயநிர்ணய உரிமையை விட்டுக் கொடுக்கப் போவதில்லை. தங்களுக்கென்று ஓர் அரசு நிறுவுவது என்ற அரசியல் இலக்கையும் தவறவிடப் போவதில்லை. இந்த இரண்டையும் ஒரே நாட்டுக்குள் செய்ய அனுமதிப்பதா அல்லது அதனைத் தடுத்து இரண்டு நாடுகள் உருவாக இடமளிப்பதா என்பதை ஸ்ரீலங்கா அரசு தான் முடிவு செய்ய வேண்டும். அதாவது உண்மையில் அரசியல் பந்து அரசின் களத்திற்குள்ளேயே இருக்கிறது என்பதே சரியான நிலையாகும்.

# ஆனையிறவு முற்றுகை....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தமிழக அரசும், மத்திய அரசும் ஈழப்போராட்டத்தை ஒடுக்கும் விதத்தில் கங்கணம் கட்டிக்கொண்டு செயற்படுகின்றன; ராஜீவ் காந்தி கொலைச் சம்பவம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரச்சார ஆயுதமாகப் பயன்படுகின்றது; தள நிலையிலும் [Ground Situation] ஆனையிறவுப் போர் முடிவுபோன்ற பெறுபேறுகள்; பொருளாதாரத்தடை மற்றும் போர்க் கஷ்டங்களினால் மக்கள் நெருக்கடி நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். இவை விடுதலைப் போராட்டத்தை பின்னடைவு நிலைக்குத் தள்ளியிருப்பதாக கருதத் தோன்றுகிறதே?

பதில்: "பின்னடைவு" என்ற வார்த்தைப் பிரயோகத்திற்குப் பதிலாக "நெருக்கடி" என்ற சொல் பொருத்தமாக அமையும் என நினைக்கின்றேன்.

எமது தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் இப்படியான பல நெருக்கடி நிலைகளை நாம் சந்தித்திருக்கின்றோம். ஒரு விடுதலைப் போராட்டம் வளர்ச்சி பெற்று முதிர்ச்சி அடையும் போது இத்தகைய நெருக்கடிகள் எழுவது இயல்பு. தேசிய விடுதலை வேண்டி நிற்கும் மக்கள் இவற்றிற்கெல்லாம் முகம் கொடுத்துத் தான் ஆக வேண்டும்.

### இந்தியாவுக்குகே பின்னடைவு

எமது போராட்ட வரலாற்றில் இந்தியத் தலையீடு தவிர்க்க முடியாத ஒரு வரலாற்று நிர்ப்பந்தமாக எழுந்தது. இது எம்மீது திணிக்கப்பட்ட ஒரு ஆக்கிரமிப்புப் போர்.

இந்திய வல்லாதிக்க குறிக்கோள்களுக்கும், தமிழீழ மக்களின் தேசிய நலனுக்கும் மத்தியில் எழுந்த முரண்பாடே போராக வெடித்தது. எமது மக்களின் தேசிய நலனைப் பாதுகாக்கும் நோக்குடனேயே நாம் இந்திய ஆக்கிரமிப்பை எதிர்கொண்டோம்.

இந்தப்போரைத் தவிர்த்திருக்கலாம் என சிலர் கருதலாம். இந்தப்போரை நாம் தவிர்த்திருப்பின், நிச்சயமாக எமது மக்களின் நலன்களை இந்திய வல்லாதிக்கத்திற்கு விட்டுக்கொடுத்திருக்க வேண்டும். அப்படி நாம் செய்திருந்தால் அது எமது மக்களுக்குப் புரிந்த மாபெரும் அரசியல் துரோகமாக அமைந்திருக்கும்.

இந்தப் போரில் பெரிய அளவில் உயிரிழப்புக்களும், பொருள் அழிவுகளும் ஏற்பட்டன என்பது உண்மை. ஆனால், அதனால் எமது போராட்டத்திற்கு பெரிய பின்னடைவு ஏற்பட்டது என்று சொல்ல முடியாது. இந்திய இராணுவத் தலையீட்டினால் நாம் எவ்வளவு பெரிய நெருக்கடியைச் சந்தித்திருந்தோம்! இந்த நெருக்கடியால் எமது மக்களின் தேசிய நலன்கள் அழிந்து போகாமல் நாம் பாதுகாத்தோம்; இரத்தம் சிந்தித்தான் நாம் இந்த இலட்சியத்தை அடைந்தோம்; இறுதியில் வெற்றியும் கண்டோம்.

### இந்தியத் தலையீடு வரலாற்று நிர்ப்பந்தம்

இந்திய வெளிவிவகாரக் கொள்கைக்கும், அணுகு முறைக்கும் ஏற்பட்ட பெரியதொரு பின்னடைவாகவே இந்தப் போரை இந்திய வரலாற்றில் ஆசிரியர்கள் விமர்சிக்கின்றனர். இந்தக் கசப்பான உண்மையை இந்திய அதிகார வர்க்கமும் ஒப்புக் கொள்ளத்தான் செய்கிறது. எனவே இந்தப் போர், எமது விடுதலைப் போராட்டத்திற்கு அல்ல, இந்திய ஏகாதிபத்திய முனைப்பிற்கு ஏற்பட்ட பின்னடைவாகவே கருதலாம்.

மறுபுறத்தில்- இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு தமிழரின் தன்னாட்சி உரிமைப் போராட்டத்தை ஒரு புதிய பரிமாணத்தில் உயர்வடிவம் பெறச் செய்தது. இதனால் எமது போராட்டம் ஒரு வகையில் முன்னடைவு கண்டதென்றும் சொல்லலாம்.

நீண்ட காலமாகவே, மாறி, மாறி பல்வேறு நெருக்கடிகளை நாம் சந்தித்து வந்திருக்கின்றோம். நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்காமல் போராட்டத்தை முன்னெடுக்க முடியாது. இன்று நாம் சந்தித்து நிற்கும் புறநிலை நெருக்கடிகளைக் காரணம் காட்டி, போராட்டம் பின்னடைவிற்குத் தள்ளப்பட்டிருப்பதாக கருதுவது தவறான கண்ணோட்டமாகும்.

### புலிகளுக்கு எதிரான பிரசாரம்

இன்று நாம் பல அழுத்தங்களுக்கு முகங்கொடுக்கின்றோம் என்பது உண்மை. இந்திய அரசும் அதன் தூண்டுதலால் தமிழ் நாடு அரசும் எமது இயக்கத்திற்கு எதிராக முழு மூச்சுடன் செயற்படுகின்றன. நீங்கள் சொல்வது போல ராஜீவ் காந்தியின் கொலைச் சம்பவம் புலிகளுக்கு எதிரான பிரச்சார ஆயுதமாகப் பயன்படுத்தப் படுகின்றது. அதே சமயம் சிங்கள அரசும் இராணுவ நடவடிக்கைகளை முடுக்கிவிட்டு, பொருளாதார நெருக்குதலை தீவிரப்படுத்துகிறது.

இந்திய நிலைப்பாடு எமக்கு வியப்பையோ, திகைப்பையோ கொடுக்கவில்லை. இந்திய ஆளும்வர்க்கம் அன்று தொட்டு எமது விடுதலை இலட்சியத்திற்கு முரணாகச் செயற்பட்டு வருகின்றது என்பதனை எமது மக்களும் நன்கு அறிவார்கள்.

எமது சுதந்திரப் போராட்டம் இந்திய தேசிய, பூகோள நலன்களுக்குப் பாதகமாக அமைந்திருப்பதாக இந்திய ஆளும் வர்க்கம் தவறாகக் கருதுகின்றது. அதனால் எமது போராட்டத்தை ஒடுக்குவதற்கு இந்திய அரசு காலத்திற்குக் காலம் பல முயற்சிகளை எடுத்துவருகின்றது.

### தன்னாட்சி உரிமை இந்தியாவில் மறுப்பு

இந்தியத் தேசிய இனங்களின் தன்னாட்சி உரிமையை இந்திய ஆளும் வர்க்கம் மறுத்து வருகிறது. தேசிய இனங்களின் தன்னாட்சி உரிமைப் போராட்டம் இந்திய ஐக்கியத்திற்கும் நில ஒருமைப்பாட்டிற்கும் ஒருபெரிய அச்சுறுத்தலாகக் கருதுகிறது. இந்த நிலைப்பாட்டை தனது எல்லைக்கு அப்பால் உள்ள இலங்கைத் தீவிலும் நிலை நிறுத்த இந்திய அரசு முனைகிறது. இதனால்தான் இந்தியாவுடன் நாம் முரண்பட வேண்டியிருக்கிறது. தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமைப்போராட்டம் தமிழ் நாட்டில் தேசிய எழுச்சியை தூண்டிவிட்டு, பிரிவினை வாதத்தை வளர்த்துவிடலாம் என்ற இந்திய அரசின் ஆதாரமற்ற அச்சம் காரணமாக எமது மக்களின் நியாய பூர்வமான போராட்டம் பெரும் நெருக்கடிகளை சந்திக்க வேண்டியிருந்தது.

எமது போராட்டத்தில் இந்தியாவின் தலையீடு 83 இல் ஆரம்பமாகி பல்வேறு பரிமாணங்களில் பேய்வடிவம் பெற்றது. இந்த நீண்ட சிக்கலான வரலாற்றை இங்கு விவரித்துச் சொல்ல முடியாது.

### புலிகளை ஒழிக்க இந்தியா முயற்சி

தமிழீழ மக்களின் உரிமைப் போராட்டத்தினை மிகத் தெளிவோடும் உறுதியோடும் முன்னெடுத்து வரும் ஒரு பலம்மிக்க போராட்ட சக்தி என்ற வகையில் விடுதலைப் புலிகளை ஒழித்துக்கட்ட இந்திய ஏகாதிபத்தியம் அன்று தொட்டு இன்றுவரை பகீரத முயற்சிகளைச் செய்து வருகின்றது. இந்த முயற்சிகளின் தொடர்ச்சியாகவே இன்று தமிழ் நாட்டில் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ராஜீவ்காந்தியின் மரண நிகழ்வும் புலிகளுக்கு எதிரான பிரச்சார ஆயுதமாகப் பாவிக்கப்படுகின்றது. புலிகள் மீது அபாண்டமான பழியைச் சுமத்தி, புலிகள் இயக்கத்திற்கு அவப் பெயரை ஏற்படுத்தி புலிகளை தமிழ் நாட்டு மக்களிடமிருந்து அந்நியப்படுத்தி விட கங்கணம் கட்டி நின்ற இந்திய ஆளும் வர்க்கத்திற்கு ராஜீவின் மரணம் ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. தமிழ் நாட்டில் தலைதூக்கிய சகலவன்முறைச் சம்பவங்களையும், புலிகளின் ஆயுத கலாச்சார வெளிப்பாடுகள் என வர்ணித்து வந்த அரசியல்வாதிகளும், மக்கள் தொடர்பு சாதனங்களும், ராஜீவின் மரணத்திற்கு புலிகள் மீது பழிசுமத்தத் தயங்கவில்லை.

### தமிழகத்தில் அரசியல் சதுரங்கம்

நீண்டகாலமாகவே புலிகளைப் பகடைக் காய்களாக வைத்து தமிழ் நாட்டு அரசியல் வாதிகள் சதுரங்க ஆட்டம் நடத்தி வந்தனர். தமிழ் நாட்டின் அதிகாரப் போட்டிக்கும், ஆட்சிக்கவிழ்ப்புகளுக்கும், அரசியல் குதது வெட்டுக்களுக்கும் விடுதலைப் புலிகளே பலிக்கடாக்கள் ஆக்கப்பட்டனர். கலைஞரின் ஆட்சிக்காலத்தில் தொடங்கிய புலி வேட்டை இன்று தமிழீழ அகதிகள்மீது பாயும் அளவிற்கு தீவிரம் அடைந்துள்ளது இதற்கெல்லாம் காரணகர்த்தாக்கள் டில்லி ஆட்சியாளரே. தமிழ் நாட்டில் நிகழும் அரசியல் பொம்மலாட்டத்திற்கும் இவர்களே சூத்திரதாரிகள். எந்த வழியிலாவது எந்தக் காரணத்தைக் காட்டியாவது தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிட வேண்டுமென்பது இவர்களது அந்தரங்க நோக்கம்.

இந்தியாவில் தோன்றியுள்ள புலிகள் எதிர்ப்பு இயக்கம் ஏதோ புதிதாக ஆரம்பித்த விவகாரம் இல்லை. இலங்கைத் தீவு சம்பந்தமான முந்திய இந்திய வெளிவிவகாரக் கொள்கையின் தொடர்சியாகத் தமிழரின் தன்னாதிக்க உரிமைப் போருக்கு ஆப்பு வைக்கும் முயற்சியாக, இந்த எதிர்ப்பு இயக்கம் இன்று முடுக்கி விடப்பட்டிருக்கிறது.

### இந்தியாவுக்கு அச்சுறுத்தல்

இராணுவ ரீதியாக புலிகள் பெற்றுள்ள அபாரமான வளர்ச்சியும், சர்வதேச ரீதியாக எமது போராட்டத்திற்கு கிட்டிவரும் முக்கியத்துவமும் இந்திய அரசுக்கு அச்சுறுத்தலைக் கொடுக்கலாம். இதனால் புலிகள் மீது நெருக்குதலைப் போடுவதற்கு இந்தியா முயற்சிப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

இந்தியாவினது போக்கோ, அல்லது இன்றைய தள நிலைமைகளோ எமது போராட்டத்திற்கு ஒரு பெரிய பின்னடைவு எனக் கருத முடியாது. இந்தியா தனது பழைய கொள்கையை தொடர்கிறது என்பது தெளிவு. தமிழீழத்தில் மீண்டும் நேரடியாகத் தலையிட முடியாத காரணத்தால் தமிழ் நாட்டில் ஒரு இரும்புத் திரையை போட முயல்கிறது. ஆனால் தமிழ் நாட்டு மக்கள் மத்தியில் எமக்கு ஆதரவும், அனுதாபமும் இருக்கும் வரை இந்தத் திரை ஒரு தடையாக அமையாது.

### தற்காலிகத் தவிர்ப்பு

தமிழீழத்து தள நிலைமைகள் எமக்கு பாதகமாக அமைந்து விடவில்லை. ஒரு பெரிய படையெடுப்பிற்கும் எம்மால் நேரடியாக முகம் கொடுக்க முடியும் என்பதை ஆனையிறவுச் சண்டையில் நிரூபித்துக் காட்டியிருக்கிறோம். இது எமது இராணுவ பலத்தின் புதுமுக வளர்ச்சியைக் காட்டுகிறது. இராணுவ தந்திரோபாய நோக்கத்துக்காக முற்றுகை தற்காலிகமாக தவிர்க்கப்பட்டுள்ளதே தவிர சண்டை முற்றுப்பெறவில்லை. எதிரி தனது கல்லறை மீது வெற்றிக் கொடியை உயர்த்தியிருக்கிறான். அவ்வளவுதான்.

இந்திய மத்திய அரசின் கொள்கை, தமிழ்நாட்டு அரசின் போக்கு உள்நாட்டுப் போர் நிலைமை, பொருளாதாரத் தடைகள் இவை எல்லாம், ஒட்டுமொத்தத்தில், எமது இயக்கத்திற்கும், எமது மக்களுக்கும் ஒரு பெரிய அழுத்தமாக, நெருக்குதலாக அமைந்திருக்கின்றது என்பது உண்மை. இந்த நெருக்குதல்கள் போராட்டத்தின் பின்னடைவு ஆகா. போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் உந்து சக்திகளாக இவை அமையலாம்.

சொந்தக் கால்களில், சொந்த மண்ணில், சொந்தப் பலத்தில் தங்கி நின்று போராட வேண்டிய அவசியத்தை இந்த அழுத்தங்கள் எமக்கு உணர்த்தி வருகின்றன. எத்தகைய நெருக்கடிகளை நாம் சந்தித்தாலும், துணிவும், உறுதியும், தன்னம்பிக்கையும் எம்மிடம் உள்ள வரை எந்த சக்தியாலும் எம்மை அழித்துவிட முடியாது.

[பேட்டியின் மிகுதி பின்னர் வெளிவரும்]


நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

நல்லூரான் நமக்குத் துணையாவான்

நல்லையின் நாதனை நாடிடுவோம்
நம்பிக்கை யோடங்கே கூடிடுவோம்
தொல்லைகள் தீர்ந்திட வேண்டிடுவோம்
தொழுதவன் புகழினைப் பாடிடுவோம்
அல்லல்செய் சூரனை ஒழித்தவனாம்
அமரர்க்கு ஆறுதல் அளித்தவனாம்
நல்லன நிகழ்ந்திடச் செய்திடுவான்
நித்தமும் நமக்குத் துணையாவான்

— நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்.


## முன்னாள் செயலாளர் பிணையில்

சென்னை, ஆக. 24

சென்னையில் 'தராசு' அலுவலகம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பாக காவலில் வைக்கப்பட்டு இருந்த மாநிலத்தின் முன்னாள் உள்துறைச் செயலாளர் நாகராஜனை சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் பிரதாபசிங் நிபந்தனையுடன் பிணையில் செல்ல அனுமதித்திருக்கிறார். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாம்களுக்கு வெளியே உள்ளோருக்கும் நிவாரணம்

## பிரதமர் சபையில் அறிவிப்பு

கொழும்பு, ஆக. 24 முகாம்களுக்கு வெளியே தங்கியுள்ள அகதிகளுக்கும் நிவாரணம் வழங்கப்பட உள்ளது.

பிரதமர் திரு. டி. பி. விஜேதுங்கா இதனை வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் அறிவித்தார் என கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

[இ-எ-3]

## இன்று அரை இறுதி

டொனால்ட் கணேசகுமார் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ். சென்ரலைட்ஸ் விளையாட்டுக் சழகம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் முதலாவது அரையிறுதி ஆட்டம் இன்று நடைபெறுகிறது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இந்த ஆட்டத்தில் ஜொனியன்ஸ் அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் (சொக்ஸ்) அணி மோதும். (உ)

## சந்நிதியில் இன்று தேர்

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத் தேர் உற்சவம் இன்று சனிக்கிழமை காலை நடைபெறுகிறது.

பூரணை தினமான நாளை ஞாயிற்றுக்கிழமை காலை தீர்த்தோற்சவம் நடைபெறும். [அ-30]

## நல்லூரில் வெளிவீதி உலா

நல்லூர் கந்தசுவாமி கோவில் மஞ்சத் திருவிழா இன்று நடைபெறுகிறது. முருகப் பெருமான் வெளிவீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள்புரிவார்.

இரண்டு வருடங்களின் பின்னர் நேற்று ஒன்பதாம் திருவிழாவன்று மாலையில் நல்லூர் முருகன் வெளிவீதி உலா வந்து அடியார்கள் மனதை மலரச் செய்தான்.

## பண்ணை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

குண்டு வீச்சின் போது இவர் கடலில் பாய்ந்தார் என்றும் நீரில் மூழ்கியதாலேயே இவர் மரணமானார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

புங்குடுதீவைச் சேர்ந்த இராசரத்தினம் சுமதி [வயது 17], றெமிஷியாஸ் பாமிதா [வயது 4], வேலணையைச் சேர்ந்த தியாகராஜா சாந்தினி [வயது 26], அல்லைப்பிட்டியைச் சேர்ந்த மைக்கல் எட்வேர்ட் [வயது 30], சாவகச்சேரியைச் சேர்ந்த தெய்வேந்திரம் யாழினி [வயது 13], யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இ. இராஜகுமார் [வயது 36] ஆகியோரே காயம் அடைந்தவர்கள் ஆவர்.

சம்பவத்தில் படகுகள் சிலவும் ப. நோ. கூ. சங்க லொறி, மினிபஸ், கடை, மற்றும் சைக்கிள்கள் சிலவும் சேதம் அடைந்தன.

குண்டு வீச்சு இடம்பெற்ற சிறிது நேரத்தின் பின்னர் ஹெலி ஒன்று அப்பகுதிக்கு வந்து நோட்டமிட்டுச் சென்றது.

நீண்ட நாட்களின் பின்னர் யாழ். நகர புறநிலைப் பகுதியில் பொம்மர்கள் வட்டமிட்ட போது மக்கள் பதற்றம் அடைந்து காணப்பட்டனர். (இ-30-15-3)


BOND INSTITUTES

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L PHYSICS

திரு. அருள்தாஸ், B. Sc.

சனி, ஞாயிறு 9-00 — HEAT
10-00 — PAPER CLASS (Mechanics)
11-00 — ELECTRICITY

ஆரம்பம் : 24 - 08 - 1991

(4263)



இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ்ப்பாணக் கிளை

ஆயுள்வேத சித்த வைத்திய அதிகாரிகள்

சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் பொறுப்பில் எமது கிளையூடாக செயற்படவுள்ள வைத்திய அதிகாரிகள் கைதடி அரச சித்த வைத்திய நிலையத்துக்கு அவசியமாகவுள்ளது. தகைமையுடையோர் தமது விண்ணப்பங்களை 28-8-1991 க்கு முன்னர் எமக்கு அனுப்பி வைக்கவும். இதற்கான நேர்முகப் பரீட்சை 29-8-1991 மூற்பகல் 9-00 மணிக்கு எமது பணிமனையில் நடைபெறும்.

கௌரவ செயலாளர்
இலங்கை செஞ்சிலுவைச் சங்க
யாழ்ப்பாணக் கிளை

இல. 73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
1991-08-22

(சி/0389)


## சோவியத் அரசு பதவி விலகும்!

மொஸ்கோ, ஆக. 24 ''சோவியத் அரசு இராஜினாமாச் செய்ய வேண்டும். ஜனநாயகப் போக்குள்ள தலைவர்களைக் கொண்ட புதிய அமைச்சரவை ஒன்று அமைக்கப்பட வேண்டும்''

— இவ்வாறு சோவியத் அதிபர் மிக்கெயில் கோர்பச்சேவ் நேற்று அறிவித்தார். [உ-த]

## புலிகளுக்கும்,...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பிரிட்டனும் இந்தியாவும் பயங்கரவாதிகளுக்கு எதிராக இணைந்து செயற்படும் என்றும்—

பயங்கரவாதிகளின் வங்கிக் கணக்குகளை விசாரிக்கவும், அவர்கள் போதை வஸ்துக் கடத்தலில் ஈடுபடுவதைத் தடுக்கவும், அவர்களின சொத்துக்களை முடக்கி வைக்கவும் வழி செய்யும் விதத்தில் பிரிட்டன் புதிய சட்டங்களை இயற்றும் என்று தூதுவர் குடால் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் திரு. கிட்டு லண்டனிலிருந்து வெளியேறுமாறு பணிக்கப்பட்டது குறித்து கேட்கப்பட்ட போது—

இத்தகைய உத்தரவுக்கு எதிராக திரு. கிட்டுவின் சட்டத்தரணி சமர்ப்பித்துள்ள முறையீடு காரணமாக லண்டனில் தங்கியிருக்க திரு. கிட்டுவுக்கு நேற்று வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்ததாக அவர் கூறினார். (உ-த)

## வவுனியா...

[2ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாம் கொண்டுவந்த தடை செய்யப்பட்ட பொருள்களின் பட்டியல் கொண்ட வர்த்தமானி அறிவித்தல் பிரதியை எடுத்துக்காட்டி வாதாடிப் பார்த்தார்.

படையினர் பிடிவாதமாக இருக்கவே 9 பரல் மண்ணெண்ணெய்யையும் தடைமுகாமில் இறக்கிய அவர் தான் இது பற்றி பாதுகாப்பு அமைச்சுடன் பேசுவதாகத் தெரிவித்துவிட்டு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

திங்கட்கிழமைகளில் மட்டுமே வவுனியா தடைமுகாம் ஊடாக வடபகுதிக்கு மண்ணெண்ணெய் எடுத்துவர படையினர் அனுமதி வழங்கியுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (த-3)

## அரசு-புலிகள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. நேற்று வரை இந்த நிலைப்பாடே நிலவியதாகவும் அந்த வட்டாரங்கள் கூறின.

### அரசின் நிபந்தனை

★ தமது இலட்சியத்தை அடைவதற்கு வன்முறை வழியை நாடுவதில்லை என்று விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் அறிவிக்க வேண்டும்.

★ எல்லா தமிழ்க் குழுக்களும் பங்குபற்றும் நிலையில் பேச்சுகள் நடத்தப்பட வேண்டும்.

— ஆகிய இரு முன் நிபந்தனைகளை அரசு விதித்திருப்பது தெரிந்ததே. (உ-3)

## கம்யூனிஸ்ட்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வியாவிலும் அந்தந்த அரசுகளினால் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

மொஸ்கோவிலும் கம்யூனிஸ்ட் கட்சிச் செயற்பாடுகளுக்கு நகரசபை தடை விதித்திருக்கிறது. அங்கு கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம் பறிமுதல் செய்யப்பட்ட சொத்தாக அறிவிக்கப்பட்டது.

கிரிகிஸியா, மோல்டிவியா மார் நிலங்களிலும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது

உஸ்பெஸ்கிஸ்தானில் கம்யூனிஸ்ட் கட்சிச் செயற்பாடுகளைக் கண்டித்து அந்தக் குடியரசின் ஜனாதிபதி இராஜினாமாச் செய்தார். [உ-த]

## தடைமுகாமில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கோவிந்தர் கந்தையா ஆவார். அவர் சுருட்டுத் தொழிலாளியாக இருக்க வேண்டும் என்றும் உறவினர்கள் யாரோ யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் வசிக்கக் கூடும் என்றும் சந்தேகிக்கப்படுகிறது. [அ-3]

# மரண அறிவித்தல்கள்

## தாமோதிரம்பிள்ளை நவரட்னராஜா

[வட்டுக்கோட்டை]

சி தா. நவரட்னராஜா [V.V. - விதானை, பழைய நகரம், அநுராதபுரம்] 15-8-1991 அன்று அநுராதபுரத்தில் சிவபதமடைந்துவிட்டார்.

இவர் அமரர் சிவகுருநாதர் தாமோதிரம்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், அமரர் சி. தா. சிவகுருநாதன் [புகையிரத தலைவர் - முன்னாள் வட்டுக்கோட்டை கிராம சபைத் தலைவர்], சி. தா. பெருமையினார் [இராசா], திருமதி நீலாயதாட்சி முத்துவேலு, அமரர் கமலாதாட்சி, Dr. பூலோக சுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர் வள்ளியாச்சி அவர்களின் அன்புக் கணவரும், திருமதி ச. இராசலட்சுமியின் அன்புத் தந்தையும், முத்துவேலு சண்முகநாதன் [தவம்] முன்னாள் றிட் உடையார் அவர்களின் அன்பு மாமனாரும், கணேஸ்குமார், சரவணபவன் [கனடா], கௌரி, பவானி, சிறீபரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

17-8-1991 சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு தகனக்கிரியைகள் சகல முறைப்படி நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

தகவல்;

மு. சண்முகநாதன் [தவம்]

அற்கின்சன் வீதி,
வட்டுக்கோட்டை.

(17888)

## அப்புத்துரை செல்வராசா

சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் 12/4 Fountain-House Lane, Maradana ஐ வசிப்பிடமாகவும் கொண்டவரும் முன்னைநாள் கொழும்பு கொம்மேர்ஷல் கம்பனி எழுதுவினைஞருமான அப்புத்துரை செல்வராசா காலமானார். அன்னார் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, பாத்திமா மகளிர் கல்லூரி ஆசிரியை விஜயலட்சுமி இன் அன்புக் கணவரும் இளைப்பாறிய உடுவில் புவியியல் ஆங்கில ஆசிரியர் த. தங்கராசா அவர்களின் அன்பு மருமகனும், யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை ஞானகுமாரி சிவநேசனதும், யாழ் மத்திய கல்லூரி ஆசிரியர் திரு. வ. சிவனேசனதும் அன்பு மைத்துனருமாவார். ஈமச்சடங்குகள் கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

த. தங்கராசா
[மாமனார்]

உடுவில்
24 - 08 - 91
[17891]

## நமசிவாயம் சீனிவாசகம்

உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த திரு. ந. சீனிவாசகம் [Retired Factory Officer Agrapatna] காலமானார். இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், சிவசம்புவின் அன்புச் சகோதரரும் சரோஜினி, ஜொதீசன் [U. K], ஜெகநாதன் [France], ரஞ்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும் கணேசவேல் J. P [உப தபால் அதிபர்] சுந்தரலிங்கம் [Vesta Industries] கணேஸ்வரி, சிவகாந்தி ஆகியோரின் மாமனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 25 - 08 - 91 சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று ஆனைக்கோட்டை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

ஆ. சி. கணேசவேல்

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை,

[17672]


COMPLAN காம்ப்ளான் R

குழந்தைகள், கர்ப்பிணிகள், முதியோர் அனைவருக்குமானது. இழந்த ஊட்டத்தைப் பூர்த்தி செய்ய 22 அத்தியாவசியமான ஊட்டச் சத்துக்கள் அடங்கியது.

COMPLAN திட்டமிட்ட பரிபூரண உணவு.

3 நாவிற்கினிய சுவைகளிலே கிடைக்கிறது.

GLAXO [CEYLON] LTD.,

[சி-0264]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 232/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 24-08-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.